இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

‘நான் உங்களிடம் சொல்லவேண்டியவை இன்னும் பல உள்ளன. ஆனால் அவற்றை இப்போது உங்களால் தாங்க இயலாது. உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார். அவர் தாமாக எதையும் பேசமாட்டார்; தாம் கேட்பதையே பேசுவார்; வரப் போகிறவற்றை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னிடமிருந்து கேட்டு உங்களுக்கு அறிவிப்பார். இவ்வாறு அவர் என்னை மாட்சிப்படுத்துவார். தந்தையுடையவை யாவும் என்னுடையவையே. எனவேதான் ‘அவர் என்னிடமிருந்து பெற்று உங்களுக்கு அறிவிப்பார்’ என்றேன்.” (யோவான் 15:12-15)

# சிறுவர்களைப் பாதிக்கும் செயற்கை நுண்ணறிவு (AI), ஆபாச காணொளிகள் குறித்த விழிப்புணர்வு இன்றியமையாதது

**வத்திக்கான்;** இலக்கியல் (டிஜிட்டல்) சூழலில் சிறார்களின் பாதுகாப்பிற்கு செயற்கை நுண்ணறிவு (AI) என்ன ஆபத்துக்களை அளிக்கிறது?" எனும் கேள்விக்குப் பதில் காணும் நோக்கத்தில் ஒவ்வொரு ஆண்டும் மே 5 அன்று இத்தாலியில் அனுசரிக்கப்படும் குழந்தை ஆபாசத்திற்கு எதிரான தேசிய தினத்தின் இத்தாலிய தூதரகம் ஏற்பாடு செய்த ஒரு மாநாட்டில் மேற்கண்ட கேள்வி குறித்து கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் அதிர்ச்சியளிக்கும் சில புள்ளிவிவரங்கள் பதிவாகியுள்ளன: 2023 ஆம் ஆண்டில் 275,000 க்கும் மேற்பட்ட சிறுவர் ஆபாச இணையதளங்கள் இணையத்தில் இருந்தன. இதில் ஒரு மாதத்தில் செயற்கை நுண்ணறிவால் (AI) உருவாக்கப்பட்ட சுமார் 11,000 புகைப்படங்களும் அடங்கும். இருப்பினும், இந்த புள்ளிவிவரங்கள் இன்னும் அதிகமாக இருக்கலாம் என்று வத்திக்கான் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

"இலக்கியல் (டிஜிட்டல்) உலகில் குழந்தைகளின் கண்ணியம்" என்ற தலைப்பில் மாநாடு உரோமில் உள்ள பொரோமியோ அரண்மனையில் நடைபெற்றது. இதில் குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினர் "ஆபத்தான நடத்தைக்கு வழிவகுக்கும்" கருவிகளைக் கொண்ட தளங்களை அதிகளவில் பயன்படுத்து கிறார்கள் என்ற கருத்து வெளிப்படுத் தப்பட்டது.

மிகவும் பாதிப்பைக் கொணரும் இலக்கியல் சூழலில் குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினரை பாலியல் மற்றும் வன்முறையில் இருந்து பாதுகாப்பதே இன்றைய சவால் என்ற தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அன்று திருத்தந்தையின் ‘"தொழில்நுட்பம் மனித வாழ்க்கையை மேம்படுத்த உதவ வேண்டுமேயொழிய பாழ்படுத்துவதாக



இருத்தல் கூடாது’ என்ற கருத்தும் மாநாட்டில் கவனத்தில் கொள்ளப்பட்டது என்று அதன் கர்தினால் O’Malley அவர்கள் மேற்கோள்காட்டினார்.

புதிய தொழில்நுட்பங்கள் மீதான திருஅவை யின் அர்ப்பணிப்பானது, நற்செய்திக்கு ஏற்ப மக்களைப் பாதுகாப்பதற்கான அதன் நோக்கத்தில் வேரூன்றியுள்ளது" என்று கார்தினால் கூறினார்.

கத்தோலிக்க திருஅவையானது மனித விழுமியங்கள் மற்றும் நெறிமுறை தரங்களுக்கு ஏற்ப ‘செயற்கை நுண் ணறிவின்’ பொறுப்பான பயன்பாடு குறித்த உலகளாவிய உரையாடலுக்கு தீவிரமாக பங்களித்து வருவதாக கர்தினால் மேலும் கூறினார்.

நிறைவாக, போன்டிஃபிகல் கிரிகோரியன் பல்கலைக்கழகத்தின் மானுடவியல் அமைப் பின் தலைமை பொறுப்பாளர் அருள்பணி ஹான்ஸ் சோல்னர், இன்றைய விவேக அலைப்பேசிகளின் ஆபத்து பற்றி எச்சரித்தார். இது "எல்லாவற்றையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக பயனீட்டாளர்களை நம்ப வைக்கிறது, ஆனால் அது அவ்வாறு இல்லை" என்று வலியுறுத்திக் கூறினார்.

கால சூழல்கள் மாற மாற மனிதர்களைப் போலவே தொழில்நுட்ப வளர்ச்சியும் பல்வேறு பரிணாமங்களை பெற்று மாறிக் கொண்டுதான் இருக்கிறது. இப்படி மாறி வரும் தொழில்நுட்பங்களால் மனிதர் களாகிய நமக்கு பலவிதமான நன்மைகளும், தீமைகளும் ஏற்படுகின்றன. அந்த வகையில் தற்போதைய ட்ரெண்டிங் தொழில்நுட்பமாக விளங்கி கொண்டிருப்பது ஏ.ஐ என்று சொல்லக்கூடிய செயற்கை நுண்ணறிவியல்.

## யூபிலி ஆண்டுக்கான இறைவேண்டல்

விண்ணகத் தந்தையே,

உம் திருமகனும் எம் சகோதரனுமான இயேசு கிறிஸ்துவில் நீர் எங்களுக்கு வழங்கிய நம்பிக்கைக்கும் தூய ஆவியார் வழியாக எங்கள் இதயங்களில் நீர் பற்றியெரியச் செய்தப் பிறர் அன்புச் சுடரும், உமது அரசின் வருகைக்கான எதிர்நோக்கை எங்களில் தட்டி எழுப்பு வனவாக!

நற்செய்தியின் விதைகளை நாளும் வளர்த்தெடுக்கும் நல்லோராய் உம் அருள் எம்மை மாற்றுவதாக! தீமையின் ஆற்றல்கள் மறைந்து உம் மாட்சி நீடித்து ஒளிரும் பொருட்டு மானிட உள்ளங்கள் புதிய விண்ணகம் புதிய மண்ணகம் நோக்கிய காத்திருத்தலில் மாற்றம் பெறுவனவாக!

யூபிலி கொண்டாட்டத்தின் அருள் விண்ணக வாழ்வுக்கான ஆர்வத்தை `எதிர்நோக்கின் திருப்பயணிகளாகிய' எம்மில் தூண்டி எழுப்புவதாக! அதே அருள் எம் மீட்பின் மகிழ்ச்சியையும் அமைதியையும் அகிலமெங்கும் அளிப்ப தாக!

என்றென்றும் போற்றற்குரிய எம் கடவுளாகிய உமக்கே மாட்சியும் புகழும் இன்றும் என்றும் உரித்தாகுக.

ஆமென்.

## கூலிம் திருஇருதய ஆண்டவர் பங்கில் மெழுகுவர்த்தி செய்யும் பட்டறை நடைபெற்றது

கெடா: கூலிமில் உள்ள திருஇருதய ஆண்டவர் பங்கைச் சேர்ந்தவர்களில் சிலர் தங்கள் வீட்டில் மெழுகுவர்த்திகளை வடிவமைத்து செய்யும் கைத்திறன் பட்டறை ஒன்று நடைபெற்றது. பங்குத் தந்தை Msgr ஹென்றி ராஜூ அவர்களின் தொடக்க இறைவேண்டலோடு பயிற்சி பட்டறை தொடங்கியது.

குருத்துவக் கல்லூரி மாணவர் சகோதரர் ஜோசப் அவர்கள் மெழுகுவர்த்தி செய்யும் கலைப்பணியை திறமையாக வழிநடத்தி, பங்கேற்பாளர்களுக்கு படிப்படியாக வழிகாட்டினார். துல்லியமாக, அவர்கள் சமையல் எண்ணெய், ஸ்டீரிக் அமிலம், கிரேயான் நிறங்கள் மற்றும் வாசனை எண்ணெய்கள் போன்ற பொருட்களைப் பயன்படுத்தி உற்சாகமான மற்றும் உயர் தர மெழுகுவர்த்திகளை வடிவமைத்தனர். இறுதியில், அவர்கள் சுயமாக மெழுகுவர்த் தியை உருவாக்கும் திறனைப்பெற்று மகிழ்ந்தனர். இல்லங்களில் கிடைக்கும் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வழியில் பயன்படுத்த மெழுகுவர்த்திகள் செய்வது ஒரு நல்ல, பயனுள்ள திட்டம் எனும் கருத்து அனைவராலும் பகிரப்பட்டது.

– ஜான் குப்புசவாரி



## செந்தூல் புனித யோசேப்பு பங்கில்

# தொழிலாளர் பாதுகாவலரான புனித யோசேப்பு திருவிழா

**கோலாலம்பூர்:** விசுவாசம் நிறைந்த பக்தியுடனும் சமூக உணர்வுடனும், புனித தொழிலாளர் பாதுகாவலரான புனித யோசேப்பு திருவிழாவையொட்டிய நவ நாளானது, புனித யோசேப்பு கொடியேற்றத்தோடு தொடங்கியது. அருள்பணி ஆல்பர்ட் ஆரோக்கியசாமி அவர்கள் சிறு




இறைவேண்டல் வழிபாட்டுடன் கொடியேற்றத்திற்குத் தலைமைத் தாங்கினார்.

பத்து நாள்கள் கொண்டாட்டம் புனித யோசேப்புவின் வழிகாட்டுதலின் கீழ் மக்களின் ஒன்றிப்பு வெளிப்பட்டது. அருள்பணி ஆல்பர்ட் ஆரோக்கியசாமி அவர்களுடன் அருள்பணி ஃபெடரிக் ஜோசப், பேரரருட்தந்தை ஜேம்ஸ் ஞானபிரகாசம் மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த அருள்பணி இயேசு அந்தோணி ஆகியோர் உடனிருக்க முதல்நாள் திருப்பலியை நிறைவேற்றினர்.

"எனது திருஅவையை மீண்டும் கட்டியெழுப்பங்கள்" என்ற முதன்மை கருப் பொருளுடன் விசுவாசிகள் ஆழ்ந்த இறைவேண்டல் மற்றும் தியானப் பயணத்தைத் தொடங்கினர். அன்னை மரியாவுக்கு செபமாலை இறைவேண்டல்களும், புனித யோசேப்புக்கான நவநாள் மன்றாட்டுகளும் ஒவ்வொரு நாளும் அழைக்கப்பட்ட அருள்பணியாளர்களின் தலைமையில் திருப்பலி கொண்டாட்டங்களும் மறையுரைகளும் தொடர்ந்தன. - அருள்பணியாளர்கள் ஆல்பர்ட் ஆரோக்கியசாமி, பீட்டர் அந்தோனி, மைக்கேல் தாஸ், வின்செென்ட் தோமஸ், இயேசு அந்தோணி, வில்லியம் மைக்கேல், ஜார்ஜ் ஹாரிசன் மற்றும் பேரருட்தந்தை மிட்செல் அந்தோணி ஆகியோரின் மறையுரைகள் வருகைத்தந்த அனைவருக்கும் சிறப்பு மறை விருந்தாக அமைந்தது என்றால் மிகையாகாது.

தொடர்ந்து ஐந்தாம் நாள் காலையில் ஏழு அருள்பணியாளர்கள் நோயிற் பூசுதல் அருளடையாளத்தை வழங்கினார்கள். .

திருவிழா நாள்களில் ஒவ்வொரு நாளும் பங்கின் அ.தி.ச. மக்கள் மற்றும் தமிழ் திருத்தூதுப் பணிக்குழு, அ.தி.ச ஒருங்கிணைப்பு மன்றம், மகளீர் குழுவினர், ஆர்.சி.ஐ.ஏ. பணிக்குழுவினர், சீன திருத்தூதுப் பணிக்குழுவினர் இளையோர், மறைக் கல்வி பணிக்குழுவினர் இறை வேண்டல் குழுவினர், புலம்பெயர்ந் தோர் ஒருங்கிணைப்பு குழுவினர் மற்றும், நற்கருணை பணிக் குழுவினர் அனைவரும் இணைந்து தோழமை உணவு பகிர்ந்தளிப்பை சிறப்பாக நிறைவேற்றினர்.

இறுதிநாளில், திருப்பலியைத் தொடர்ந்து, புனித யோசேப்பு சுரூபம் ஆசீர்வதிக்கப் பட்டதைத் தொடர்ந்து, செந்தூல் சாலை நெடுகிலுமாக புனித யோசேப்பு சுரூப பவனி இடம்பெற்றது. ஏற்குறைய 1500 பேர் இந்த திருபவனியில் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பெந்தக்கோஸ்து பெருவிழா : தூய ஆவியார் அருளும் புது வாழ்வு

இஞ்ஞாயிறன்று நாம் சிறப்பிக்கும் தூய ஆவியாரின் வருகைப் பெருவிழாவை, ‘பெந்தக்கோஸ்து’ என்றும் அழைக்கிறோம். ‘பெந்தக்கோஸ்து’ என்ற சொல்லுக்கு, ‘ஐம்பதாம் நாள்’ என்று பொருள். உயிர்ப்புப் பெருவிழாவைத் தொடர்ந்து வந்த ஐம்பது நாட்களில், இறைஇரக்க ஞாயிறு, நல்லாயன் ஞாயிறு, விண்ணேற்றப் பெருவிழா என்று, பல விழாக்களைக் கொண்டாடினோம். இனிவரும் நாட்களிலும், மூவொரு இறைவன், கிறிஸ்துவின் திருஉடல், திருஇரத்தம், கிறிஸ்துவின் திருஇருதயம் ஆகிய விழாக்களும், கொண்டாட்டங்களும் தொடரும். ஒவ்வொரு விழாவையும் கொண்டாடுகிறோம் என்று சொல்லும்போது, எதைக் கொண்டாடுகிறோம், எப்படி கொண்டாடுகிறோம் என்பதைச் சிந்திப்பது நல்லது.

இயேசுவின் உயிர்ப்பு, விண்ணேற்றம், தூய ஆவியாரின் வருகை என்ற இந்த மூன்று நிகழ்வுகளும், நமது கிறிஸ்தவ நம்பிக்கையின் அடித்தளமான உண்மைகள். இந்த முக்கியமான மறையுண்மைகள், முதன்முதலில் நிகழ்ந்தபோது, உலகினர் கவனத்தை ஈர்க்கும்வண்ணம், எக்காள முழக்கமும், வாணவேடிக்கைகளும், இடம்பெற்றிருக்க வேண்டாமா? அப்படி நடந்ததாகத் தெரியவில்லையே! மாறாக, இந்நிகழ்வுகள் ஒவ்வொன்றும், முதன் முதலில் நடந்தபோது, அமைதியாய் நடந்தன.

‘விழா’ என்ற சொல்லுக்கு, இவ்வுலகம் வகுத்துள்ள இலக்கணத்திலிருந்து, முற்றிலும் மாறுபட்டதோர் இலக்கணத்தை, திருஅவையில் நாம் சிறப்பிக்கும் இவ்விழாக்கள் வகுத்துள்ளன. உலகம் வகுத்துள்ள இலக்கணத்தில், பகட்டு, பிரமிப்பு, பிரம்மாண்டம் இவைகளே, விழாக்களின் உயிர்நாடிகளாய் உள்ளன. இந்த விழாக்கள் எதற்காக கொண்டாடப் பட்டன என்று அடுத்தநாள் கேட்டால்கூட, நமக்கு ஒன்றும் நினைவிருக்காது.

கொண்டாட்டம் என்ற சொல்லுக்கே புது இலக்கணம் தந்து, நமக்கு, பாடங்களையும் சொல்லித்தந்துள்ளனர், இயேசுவும், அவரது சீடர்களும். கொண்டாட்டம் என்பது, எப்போதும், பிறரது கவனத்தை ஈர்ப்பதிலேயே குறியாய் இருக்கவேண்டும் என்று இல்லை. நாம் கொண்டாடும் விழாவின் உள்பொருள் எவ்வளவு தூரம் நம் வாழ்வை மாற்றுகிறது என்பதில், நம் கவனம் இருக்கவேண்டும். இவ்விதம் கொண்டாடப்படும் விழாக்கள், ஒருநாள் கேளிக்கையாகக் கடந்துபோகாமல், வாழ்நாளெல்லாம் நம்முள் மாற்றங்களை உருவாக்கும் வாய்ப்பாக அமையும். இத்தகையப் பாடங்களை நமக்குச் சொல்லித்தரும் விழாக்கள் - இயேசுவின் உயிர்ப்பு, விண்ணேற்றம், தூய ஆவியாரின் வருகை ஆகிய முப்பெரும் விழாக்கள்.

தூய ஆவியார் உயிர் மூச்சாக விளங்குகிறார் என்று கூறும் விவிலியச் சொற்கள், இன்று நாம் வாழும் சூழலில், நமக்கு உறுதியூட்டும் சொற்களாக விளங்கவேண்டும் என்று மன்றாடுவோம். தூய ஆவியாரின் வருகைப்பெருவிழா நமக்குச் சொல்லித்தரும் முக்கியப் பாடம் இதுதான்… அவர், வானிலிருந்து இறங்கிவந்து, சிறிது காலம் நம்மோடு தங்கிவிட்டு, மீண்டும் விண்ணகம் சென்றுவிடும் இறைவன் அல்ல, மாறாக, அவர் நமக்கும், நம்மைச் சுற்றியுள்ள படைப்பு அனைத்திற்கும், உயிர் வழங்கும் மூச்சாக, எப்போதும் உறைந்திருக்கும் இறைவன் என்பது, இப்பெருவிழா பறைசாற்றும் பேருண்மை.

இன்று நாம் ஒரு பிறந்தநாளைக் கொண்டாடுகிறோம். ஆம்… தூய ஆவியாரின் வருகைப் பெருவிழாவன்று, திருஅவை என்ற குழந்தை பிறந்தது. ஒவ்வொரு குழந்தையும் இவ்வுலகில் பிறக்கும்போது, அக்குழந்தையைப் பற்றிய

எதிர்பார்ப்புக்கள் இருக்கும். திருஅவை என்ற குழந்தை பிறந்தபோதும், பல எதிர்பார்ப்புக்கள் இருந்தன. திருஅவை என்ற குழந்தை பிறந்தவிதம், பிறந்ததும் அக்குழந்தையிடம் வெளிப்பட்ட குணம் ஆகியவற்றை, இப்பிறந்தநாளன்று நாம் சிந்திப்பது பயனளிக்கும்.

> தூ ஆவியார் உயிர் மூச்சாக விளங்குகிறார் என்று கூறும் விவிலியச் சொற்கள், இன்று நாம் வாழும் சூழலில், நமக்கு உறுதியூட்டும் சொற்களாக விளங்க வேண்டும் என்று மன்றாடுவோம்.

# தூய ஆவியாரின் தூண்டுதலில் நம் சீடத்துவம் சிறக்கட்டும்!

இன்று நாம் தூய ஆவியின் அதாவது பெந்தகொஸ்து பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். இந்த நாளில்தான் தூய ஆவியானவர் சீடர்கள் மீது இறங்கி வந்ததோடு, அவர்களைப் புதிய மனிதர்களாக மாற்றுகின்றார். மகிழ்ச்சி பொங்கும் தூய ஆவியானவரின் பெருவிழாவைக் கொண்டாடும் இந்த நல்ல நாளில், இவ்விழா நமக்கு உணர்த்தும் செய்தியை சிந்தித்துப் பார்ப்போம்.

ஆண்டவர் இயேசு இந்த உலகினை விட்டுப்போவதற்கு முன்பாக தன்னுடைய சீடர்களிடம், “நான் போவதால் நீங்கள் பயனடைவீர்கள். நான் போகாவிட்டால் துணையாளர் உங்களிடம் வரமாட்டார். நான் போனால் அவரை தந்தையாம் கடவுள் உங்களிடம் அனுப்புவார்” என்பார் (யோவான் 16:7) அவ்வறே தூய ஆவியின் வருகையால் திருஅவை பிறந்தது.

தூய ஆவியாரைக் குறித்து இன்றைய முதல் வாசகத்தில் அவர் வலுவூட்டுகிற கடவுள் என்பதாகும் சீடர்கள் யாவரும் யூதர்களுக்கு அஞ்சி தங்களை அறைக்குள் அடைத்துக்கொண்டு வாழ்ந்துவந்தார்கள். அப்போது தூய ஆவியார் அவர்கள் மீது நெருப்புப் போன்ற நாவுகள் வடிவில் இறங்கி வருகின்றார். நெருப்பு கடவுளின் உடனிருப்பை நமக்கு எடுத்துரைப்பதாக இருக்கின்றது (விப 19:16-18). நாவுகள் என்பது வாய் அல்லது வாய்ச்சொல்லோடு தொடர்புடையதாக இருக்கின்றது. விவிலியத்தில் தூய ஆவியானவரைப் பற்றி எங்கெல்லாம் சொல்லப்படுகின்றதோ அங்கெல்லாம் வாழ்வும், வலுவும் இணைந்தே வருகின்றது என்பதை நாம் மறுக்கமுடியாது.

இன்றைய இரண்டாம் வாசகத்தில் பவுலடியார், “சகோதர சகோதரிகளே, நீங்கள் ஆவியின் தூண்டுதலுக்கு ஏற்ப வாழுங்கள்” என்பார். தூய ஆவியின் தூண்டுதல் – கனிகள் -என்ன என்பதை அவரே வரிசைப்படுத்துவார், “அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் என்பவையே ஆகும் என்று அவர் சொல்வார். இப்படி தூய ஆவியின் தூண்டுதலுக்கு ஏற்ப வாழும்போது இறையாட்சியை உரிமைப் பேறாக பெற்றுக்கொள்வது உறுதி.

இந்த பெந்தகோஸ்தே பெருவிழாவில் சிந்தனைப் பொருளாக அமைவது ஆவியின் வருகையால் மலர்ந்து புதுவாழ்வு தான். ஆவியின் செயல்பாடு உயிருள்ளது: ஆற்றல்மிக்கது: வலிமையானது: வாழ்விக்க கூடியது. தூய ஆவியின் ஆற்றலினால்தான் நாமும் இயக்கப்படுகிறோம்.‘உங்களோடு என்றும் இருக்கும்படி’ என்றே தூய ஆவியை ஆண்டவர் இயேசு வாக்களித்திருக்கிறார் (யோவா 14:16). தூய ஆவியின் வருகையால்தான் எல்லாவற்றிற்கும் மேலாக, மூவொரு கடவுளின் இரண்டாம் நபராகிய கிறிஸ்து கன்னி மரியின் திருவயிற்றில் கருத்தரித்தார்: இருளில் பயத்தில் உறைந்திருந்த திருஅவையும் எழுச்சிப் பெற்றது.

**தூய ஆவி ஞாயிறு -பெருவிழா**

| | |
|---|---|
| முதல் வாசகம் | தி.பணி 2:1-11 |
| திரு.பாடல் | *104:1ab,24ac.29bc-30.31,34* |
| 2-ம் வாசகம் | கலா 5: 16-25 |
| நற்செய்தி | யோவான் 15:26-27;16:12-15 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- தூய ஆவிக்குரியது**

தூய ஆவி அருளும் நீதி, அமைதி, மகிழ்ச்சி (உரோ. 14:17) தூய்மை, அறிவு, பொறுமை, நன்மை, ஆகிய தூயஆவியின் கொடைகளும் (2 கொரி. 6:6) அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை ஆகிய கனிகளும் நம்மை நெறிப்படுத்துவதற்காக அருளப்பட்டவை என்பதை அறிந்துணர்ந்து கிறிஸ்துவின் உயிருள்ள சீடர்களாக வாழ முற்படுவோம். சீடத்துவம் செழிக்க தூய ஆவியாரே நமக்கு உற்ற துணை.

த. ஜோசப் சகாய ஆனந்த், மலாக்கா.